

ராணி காமிக்ஸ்
கமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
ரவுடி ராஜா
ரூ 3

ராணி காமிக்ஸ் – 342
(மாதம் இருமுறை இதழ்)
செப்டம்பர் 16 – 30
1998

முகமூடிவீரர் மாயாவி தோன்றும்

ரவுடி ராஜா

பெங்காலியாவின் அடர்ந்த காட்டுக்குள் மாயாவியுடன் இருந்த ரெக்ஸ் பணக்கார நாடான பரோன்கான் நாட்டுக்கு மன்னர் ஆனான். பரோன்கான் நாட்டில் இருந்த ரெக்ஸ். மாயாவியை நினைத்துக் கொண்டிருந்தான்.
மாமா, குழந்தைகளை பார்த்து எவ்வளவு நாளாச்சு!
காட்டுக்குள் இருந்த ரெக்ஸ் திடீரென்று மன்னரானது எப்படி? அவனது பூர்வீகக் கதையை தெரிந்துகொள்ளுங்கள்.
சில ஆண்டுகளுக்கு முன்பு— காட்டு எல்லையில் இருந்த வீட்டில்—
கொர்...! கொர்...!
டுமீல்...!
பெரியவர் இறந்து கிடக்கிறாரே!
மாயாவி வீட்டுக்குள் பார்த்தபொழுது அழகிய குழந்தை இருந்தது.
ஆகா! என்ன அழகு! ராஜகம்பீரம் முகத்தில் இருக்கிறது. இனி இவன் பெயர் ரெக்ஸ்!
மாயாவி குழந்தையை எடுத்து வந்தார்.
நீ யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும்!
பரோன்கான் மன்னரின் ஒரே மகள் மன்னரை எதிர்த்து காதலனை மணக்கிறாள்.

பிரசவத்தின்போது மகள் இறந்துபோனதும் மன்னர் துடிதுடித்தார்.
இந்தக் குழந்தையை நான் பார்க்க விரும்பலை. எங்கேயாவது தூக்கி எறி!
குழந்தை எடுத்துச் செல்லப்பட்டது.
குழந்தையை நாம் வளர்ப்போமே!
வேண்டாம்! இது மன்னருக்கு தெரிந்தால் ஆபத்து!
முடிவில் குழந்தை கடலில் விடப்பட்டது.
மோரி மீனவர்கள் கடலில் மிதந்த குழந்தையை கண்டெடுத்தார்கள்.
வயதான தம்பதிகளிடம் அந்த குழந்தை ஒப்படைக்கப்பட்டது.
இது கடல் கொடுத்த பரிசு!
ஆனால் காலரா நோயில் பெரியவர்கள் இறக்க— குழந்தை மாயாவியிடம் வந்தது.
எப்படியும் உன் பெற்றோரை கண்டு பிடிப்பேன்!
மாயாவி ரெக்சை வளர்த்து வந்தார்.
பரோன்கான்! அது என்ன பெயர்!
ரெக்சின் கழுத்தில் கிடந்த டாலரை வைத்து அவன் பரோன்கான் மன்னரின் பேரன் என்பதை கண்டுபிடித்தார்.

மன்னரிடம் ே ரனை ஒப்படைத்தார்.
பேராண்டி!
தாத்தா!
மன்னர் படுக்கையில் விழுந்ததும்—
மாமா! நான் மன்னர் ஆகத்தான் வேண்டுமா?
அது உன் கடமை ரெக்ஸ்!
முடிவில் ரெக்ஸ் பணக்கார நாடான பரோன்கான் நாட்டின் மன்னன் ஆனான்.
அரசே! இன்றைக்கு நமது படை பலத்தை பார்வையிட வேண்டும்!
பின்னர் மற்ற அமைச்சர்களை சந்திக்க ேவண்டும்!
போதும்! போதும் நிறுத்துங்கள்!
அரசருக்கு ஆட்சி செய்ய பிடிக்கலை போலிருக்கு!
காட்டையே நினைத்துக் கொண்டிருக் கிறார்!
பக்கத்து நாட்டின் ராஜா ட்யூக் சூதாட்டத்தில் பொருள்களை இழந்தான்.
அய்யோ... எல்லாம் போச்சு!

எனக்கு தங்கம் வேண்டும்?
சார்! நம்மிடம் எதுவுமில்லை!
ஆனால் பரோன்கான் நாட்டில் நிறைய தங்கம் இருக்கிறது!
சிறுவன் ரெக்ஸை சந்தித்து கேட்கிறேன்!
பரோன்காவில்—
பக்கத்து நாட்டு ராஜா ட்யூக் உங்களை காண வந்திருக்கிறார்!
எதற்காக?
கடன் கேட்டு வருவான்!
நான் என்ன செய்வது?
அது உங்கள் விருப்பம்!
தாத்தா அவரிடம் எப்படி நடந்து கொள்வார்!
மன்னா! உங்களிடம் ஒரு சின்ன உதவி நாடி வந்திருக்கிறேன்!

நாட்டில் நிதி பற்றாக்குறை. கொஞ்சம் கடன் கொடுத்தால் நல்லது!
கடனா... அதெல்லாம் கொடுக்க முடியாது!
ரெக்ஸ் மறுத்தவுடன் ட்யூக் ஆத்திரமடைந்தான்.
பக்கத்து நாட்டுக்கு உதவி செய்ய மறுக்கிறாயா?
ஏற்கனவே உன்னைப் பற்றி தாத்தா சொல்லியிருக்கிறார்!
ரெக்ஸ்! ஏழை பாழைகளுக்கு நல்ல காரியத்துக்கு தாராளமாக பணம் கொடுக்கலாம்!
ஆனால் பிறருக்கு கடன் மட்டும் கொடுக்காதே!
சரி தாத்தா!
பொடியனே! என்னிடமே வாலாட்டுகிறாயா?
நீ வெளியே போகலாம்!

உன்னை என்ன செய்கிறேன் பார்!
உன்னால் எதுவும் செய்ய முடியாது!
மன்னா...!
பேசாமல் இருங்கள் தளபதி!
பொடியனே... உன்னை...!
ட்யூக் ரெக்சை தாக்க முயன்றபொழுது ரெக்ஸ் அவன் கையை மடக்கினான்.
மாயாவி கற்றுக்கொடுத்த வித்தை இப்பொழுது அவனுக்கு உதவியது.
இதை உன்னால் மறக்க முடியாது.
மாயாவியின் டிரெய்னிங் என்றால். சும்மாவா?
ஆ...!

நீ பெரிய ரவுடியாக இருக்கலாம்! ஆனால் இங்கே வாலாட்டாதே!
ஏய்... பொடியனே!
என்னை அவமானப்படுத்தி விட்டாய் உன்னை சும்மா விடமாட்டேன்!
ஆ...!
முட்டாள்! பொடியன் என்னை தாக்கி விட்டானே?
அரசே! நீங்கள் பலே கில்லாடிதான்!
எல்லாம் என் மாமா கற்றுக் கொடுத்தது!

ஆனால் அவன் ரவுடி ராஜா!
யாராக இருந்தால் எனக்கென்ன?
என் உயிரே போனாலும் அந்த சிறுவனை விடப் போவதில்லை!
என்ன அரசே! வாடிப்போய் இருக்கிறீர்கள்?
என் மாமாவை பார்க்க வேண்டும் போல் இருக்கிறது!
மாயாவியுடன் நீங்கள் பேசலாமே?
எப்படி தளபதி?
நம்மிடம்தான் ரேடியோ போன் இருக்கிறதே!
ஆமாம்! நல்ல யோசனை!

காட்டில் உள்ள மரவீட்டில்—
ஏய் பசங்களா! தயாராயிட்டீங்களா?
வாங்க புறப்படலாம்!
பார்த்து இறங்குங்க!
டார்லிங்! ஏன் பயப்படுறே!
தொலைபேசி அழைக்கிறதே?
எங்கள் அலுவலகத்தில் இருந்து அழைப்பு வந்துவிடக்கூடாது!
மாமா! நான் ரெக்ஸ் பேசுகிறேன்!
அட ரெக்ஸ்! நாங்கள் ஈடன் தீவுக்கு புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம்!
ரெக்ஸா...?
மாமா! நானும் உங்களுடன் வர ஆசையாக இருக்கு மாமா!
வாயேன் ரெக்ஸ்!

நான் எப்படி வரமுடியும்!
ரெக்ஸ்... நீ மன்னர்! நீ வைத்ததுதான் சட்டம்!
நம்முடன் ரெக்சும் வருகிறான்!
ரெக்ஸ் வந்ததும் புறப்படுவோம்!
அய்யா... ஜாலிதான்!
தளபதி! நான் காட்டுக்கு போகிறேன். உடனே ஒரு ஹெலிகாப்டர் வேண்டும்!
இதோ ஏற்பாடு செய்கிறேன்!
அப்போது—
பரோன்கான் மன்னருக்கு எங்கள் ராஜா சவால் விட்டிருக்கிறார்!
எங்கள் ராஜா ட்யூக்! தங்களின் நட்புக்காக வந்தார்!
இல்லை கடன் வாங்கத்தான் வந்தார்!
நீங்கள் அவரை அவமானப்படுத்தி விட்டீர்கள்?
அவர் என்னை தாக்க வந்ததால் நான் பதிலுக்கு தாக்கினேன்!

எங்கள் வழக்கப்படி ஆயுதச் சண்டை மூலம் தீர்க்க ராஜா விரும்புகிறார்!
என்ன தளபதி ஏதோ உளர்கிறார்?
எங்கள் மன்னருக்கு ஆயுதங்களை கையாளத் தெரியாது என்று சொல்!
அது முதலிலேயே தெரிந்திருக்க வேண்டும்!
சண்டைக்கு மறுத்தால் கோழை என்ற பட்டம் கிடைக்கும்!
24 மணி நேரம் தருகிறோம். அதற்குள் உங்கள் முடிவை சொல்லுங்கள்!
அந்த ரவுடி ராஜா என்ன ஆயுதம் எடுப்பான்!
ஈட்டி... துப்பாக்கி... இரண்டிலும் சூரன் அவன்!
எனக்கும் அதை கையாளத் தெரியும். மாமா கற்றுக் கொடுத்திருக்கிறார்!
அரசே! அவன் மகாமுரடன்.
நான் சண்டைக்குத் தயார்!
மாயாவியிடம் கேட்டுப் பார்ப்போம்!
மாமா! அவன் ரவுடி ராஜாவாம். நான் அவனுடன் மோத வேண்டுமா?

ரெக்ஸ்! தளபதியிடம் போனைக் கொடு!
அவன் ரவுடி ராஜா மாயாவி! ஏற்கனவே பலரை தீர்த்துக் கட்டியிருக்கிறான்!
சண்டையிட மறுத்தால் ரெக்ஸை கோழை என்று இகழ்வார்கள்!
எனக்கு ஹெலிகாப்டர் அனுப்பு... நானே நேரில் வருகிறேன்!
மாயாவியை அழைத்து வர ஹெலிகாப்டர் புறப்பட்டு விட்டது!
மாமா வருவதில் மகிழ்ச்சி! ஆனால் அந்த ரவுடி ரா
நானே சமாளிப்
டியூக் நாட்டில்—
அந்தச் சிறுவன் எப்படியும் சண்டைக்கு வருவான்!
வரட்டும்! அவனை எமலோகத்துக்கு அனுப்பி வைக்கிறேன்!
என்னப்பா ரெக்ஸ் வரவில்லையா?
நாம் ஈடன் தீவுக்கு போகலாம்பா!
நான் ரெக்ஸை பார்த்து கூட்டி வருகிறேன்!

ரெக்சுக்கு ஆபத்தில்லையே?
ஒரு சிறிய பிரச்சினை! நான் போனால்தான் சரியாகும்!
இதோ ஹெலிகாப்டர் வந்துவிட்டது!
மாயாவி நீங்கள்தானே உங்களை அழைத்து வர ஆணை!
புறப்படலாமா?
ஹெலிகாப்டர் பரோன்கான் வந்து சேர்ந்தது.
யார் இந்த முகமூடி?
நம்முடைய மன்னருக்கு நெருக்கமானவர்!
அய்யா மாமா வந்தாச்சு!
மாமா! நான் உங்களை சந்திப்பேன் என்று நினைக்கவே இல்லை!
எனக்கும் அப்படித்தான்!
டியூக் நாட்டில்—
24 மணி நேர கெடு முடியப்போகுது. இன்னும் ரெக்சிடம் இருந்து பதில் வரலையே?
நம் வேலையை காட்ட வேண்டியதுதான்!
ரெக்ஸ்! என்ன பிரச்சினை!
ஷாம்பாத் ராஜா கடன் கேட்டான். தரமுடியாது என்றேன்!
உடனே என்னை தாக்க வந்தான். நான் அவனுக்கு பதிலடி கொடுத்தேன்! திரும்பவும் முறைப்படி மோத என்னை அழைக்கிறான்!

ரெக்ஸ் சண்டை யிடாவிட்டால் நாட்டுக்கு அவமானமா?
ஆமாம் மாயாவி!
மாமா! நான் துப்பாக்கியை எடுக்கவா... இல்லை கத்தியா?
இரண்டும் வேண்டாம் ரெக்ஸ்! அவனை வீழ்த்த வேறு வழி இருக்கிறது!
கோழை என்ற பட்டத்தை என்னால் ஏற்க முடியாது! அதோ ரவுடி ராஜாவின் தூதுவன் வருகிறான்!
மாமா! நான் தூதுவனுக்கு என்ன பதில் சொல்வது?
ரெக்ஸ் சிறுவன் என்பதால் என் மன்னர் அவனுடன் மோத அவருக்கு தன் மானம் இடம் தரவில்லை! அதனால்! இருவரும் மோதுவதற்குப் பதிலாக...
நஷ்டஈடாக ரூ. 30 இலட்சத்துக்கு தங்கமாக கேட்கிறார்.
முட்டாள்! கடன் கேட்டு கிடைக்கவில்லை என்றதும் நஷ்டஈடாக கேட்கிறானா?
அரசே! அவனுடன் மோதுவதைவிட இது மேல்!
டியூக் நாட்டில்—
பொடியன் என்னுடன் மோத அஞ்சுவான்! அதனால் தங்கத்தை கொடுத்துவிடுவான்! ஆஹா...ஹா...!

அவ்வளவு தங்கம் எப்படிக் கொடுக்க முடியும்!
ரெக்ஸ்! இங்கே வா சொல்கிறேன்!
நான் சொல்கிறபடி செய்!
தங்கம் தரமுடியாது. நாளை உன் ராஜாவை மோதுவதற்கு தயாராக இருக்கச் சொல்!
?!
மோதுவதற்கு என்ன ஆயுதம்?
அதை நாளைநான் முடிவு செய்வேன்!
டியுக்கின் தூதுவன் திரும்பினான்.
டியுக்கிடம் சொன்னான்.
சிறுநரி சிங்கத்திடம் மோதப் போகிறதா? என்ன ஆயுதம்?
அதை நாளை கொண்டு வருவானாம்!
எனக்குத் தேவை தங்கம்தான்! அவனை தீர்த்துக்கட்டினாலும் சரிதான்!

என்னை அவமானப் படுத்தியதற்கு அவனை விடப்போவதில்லை!
இரண்டு மன்னர்களும் மோதுவதை வேடிக்கை பார்க்க மக்கள் கூடி இருந்தார்கள்.
ஷாம்பாத் மன்னர் டியுக் மோதுவதற்கு வந்தான்.
எங்கள் மன்னர் ஆயுதம் தேர்வு செய்து விட்டார்!
உன் மன்னருக்கு ஆயுசு முடியப் போகிறது!
ரெக்ஸ்! அவன் உன் ஆயுதத்தை பார்த்ததும் அதிர்ந்துபோவான்!
இது ஆயுதமா? சிறுவன் உன் புத்தியை காட்டி விட்டாயே?

இது என்ன ஆயுதம்?
கவண் கல்!
கோலியத்துக்கு எதிராக தாவீது பயன்படுத்திய பழங்கால ஆயுதம்!
உங்கள் ஆயுதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்!
!!??
இந்த கேலிகூத்துக்கு நான் சம்மதிக்க மாட்டேன்!
நீங்கள் மோதலுக்கு அழைத்ததால் ஆயுதத்தை தேர்ந்தெடுப்பது எங்கள் உரிமை!
ஆயுதத்தை கையில் எடு! இல்லை ரெக்ஸ் உன்னை தூக்கி பந்தாடிவிடுவான்!
இருவரும் ஆளுக்கொரு கவ்ண் கல்லை எடுத்துக்கொண்டார்கள்.
ம்... இருவரும் பின்னே செல்லுங்கள்!
நல்ல வேடிக்கைதான்!

ம்... கவணில் கல்லை எடுத்து வையுங்கள்!
இருவரும் மோதுவதற்கு தயாரா?
நான் தயார்!
நானும்... த...தயார்!
ரெடி..! கல்லை விடுங்கள்!
இருவரும் கற்களை கவணில் இழுத்துவிட்டார்கள்.
விசுக்...!
படீர்...!
ரவுடி ராஜா டியூக்குக்கு அனுபவம் இல்லாததால், கவண் அறுந்துபோனது.
ஆ...!
விசுக்...!
படார்...
ரெக்ஸ்விட்ட கல்... நேராக வந்து டியூக்கை பதம் பார்த்தது.
பொடியன் என்னை மேலும் மேலும் அவமானப் படுத்துகிறான்!

ஆ...! இதற்கு இப்பொழுதே முடிவு கட்டுகிறேன்!
டியூக் உடனே துப்பாக்கியை எடுத்தான்.
முட்டாள்...! என்னையா அவமானப்படுத்துகிறாய்?
அதற்குள் மாயாவி துப்பாக்கியை எடுத்து டியூக்கை சுட்டார்.
டுமீல்...
டியூக்கின் கையில் இருந்த துப்பாக்கி எகிறி விழுந்தது.
உன்னை எப்படியும் கொல்லாமல் விடமாட்டேன்!
துப்பாக்கியை எடுத்தது இல்லாமல், கத்தியை வேறு எடுக்கிறாயா? இந்தா வாங்கிக்கொள்!

ரெக்ஸ் குறிபார்த்து அடித்து இருந்தால் உன் மண்டை பணால் ஆகியிருக்கும்!
ஆ...!
ரெக்ஸ்! உன்னை சாகடிக்காமல் விட்டதே பெரிசு!
அதற்கு நன்றி சொல்லி அவனிடம் மன்னிப்பு கேள்!
ரெக்ஸ்! மன்னித்து உயிர்ப்பிச்சைக் கொடுங்க!
பிழைத்துப்போ!
இனி உன் நிழல்கூட இங்கு படக் கூடாது! மீறினால் கொதிக்கும் எண்ணெய்யில் வீசப்படுவாய்!
அப்படிப் போடுங்க மாமா!
மன்னர் ரெக்ஸ் சிறுவனாக இருந்தாலும் வீரத்தில் சூரன்தான்!
அங்கங்கே ரெக்ஸைப் பற்றியேதான் பேசினார்கள்.
ரெக்ஸ்! இனி நாம் ஈடன் தீவுக்கு போகலாம்!
அய்யா....

தளபதி! ஹெலிகாப்டர் தயாரா?
உங்கள் பாதுகாவலர்களும் தயார்!
12 பேர் எனக்கு காவலா?
ஆமாம் மன்னா!
இவர்களை நான் எங்கே தங்க வைப்பேன்!
மன்னரின் பாதுகாப்புக்கு இவர்கள் அவசியம் தேவை!
பயணத்துக்கான அனைத்தும் தயார்!
முகாம், படுக்கை, சாப்பாடு எல்லாமே தயார்!
அம்மாடியோவ்!
இதையெல்லாம் ஈடனுக்கு எடுத்துச் சென்றால் மிருகங்கள் மிரளுமே!
ரெக்ஸ் பாதுகாப்புக்கு நான் இருக்கிறேனே!
இவர்தான் பாதுகாப்பு உயர் அதிகாரி. இவரிடம் கேட்டுப் பாருங்கள்!
அது முடியாது!

உடனே மாயாவி டயானாவுக்கு போன் செய்தார்.
டயானா! நீ குழந்தைகளுடன் ஈடனுக்குச் சென்றுவிடு! நானும் ரெக்சும் பிறகு வருகிறோம்!
டயானா புறப்பட்டாள்.
அப்பாவும் ரெக்சும் எப்ப வருவாங்க!
அவர்கள் ஈடனுக்கு வந்துடுவாங்க!
டயானா பாதுகாப்புக்கு பிக்மி குள்ளர்களை அழைத்துக்கொண்டு ஈடனுக்கு புறப்பட்டாள்.
டயானா குழந்தைகளுடன் ஈடனுக்கு வந்து சேர்ந்தாள்.
அப்பா இன்னும் வரவில்லையே?
இதோ ஹெலிகாப்டர் சத்தம் கேட்கிறதே!
ஹெலிகாப்டரைக் கண்டதும் குழந்தைகள் குதூகலமடைந்தார்கள்.
ரெக்சைக் கண்டதும் குழந்தைகள் பரவசமடைந்தார்கள்.
ஆய்... ரெக்ஸ்!
ரெக்ஸ் வந்தாச்சு!
ஹிட்...! ஹிலாயிஸ்!

இவர் ரெக்சின் பாதுகாப்புக்கு வந்திருக்கிறார்!
இந்த ஆற்றில் மனிதனை தின்னக்கூடிய பிராங்கா மீன்கள் இருக்கின்றன. ஆற்றைக் கடந்து செல்லவேண்டும்!
ரெக்சைப் பத்தி பயப்படத் தேவையில்லை!
இந்த பிக்மி குள்ளர்கள்தான் ரெக்சுக்கு பாதுகாப்பு வளையம்!
பிக்மி குள்ளர்களைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன்!
இவர்களும் என் நண்பர்கள்தான்!
அம்பில் நஞ்சு தடவி இருப்பார்கள்!
நாம் ஆற்றைக் கடக்கலாமா?
மாமா! இந்த உடையை கழற்றட்டுமா?
ஆற்றைக் கடந்ததும் கழற்றிவிடு!
அனைவரும் மிதவையில் ஏறினார்கள்.
இந்த ஆறே எங்களுக்கு வேலிதான். இதில் விழுந்தால் எலும்புதான் மிஞ்சும்!

ஈடன் தீவில் இருந்த மிருகங்கள் மாயாவியை வரவேற்க தயாராக இருந்தன.
இவைகள் எப்படி ஒற்றுமையாக இருக்கின்றன!
இவைகளை குட்டியில் இருந்தே வளர்த்து வருகிறேன்!
இது எப்படி சாத்தியம்!
இதோ டைகர்! பால்டி! இவைகள் பழகுவதற்கு அவகாசம் வேண்டும்!
ரெக்ஸ்! உன்னை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி!
எனக்கும்தான்! முதல்ல இந்த உடையை கழற்றணும்!
ரெக்ஸ் மன்னன் உடையை கழற்றி எறிந்தான்.
இப்போதுதான் நிம்மதி!
ரெக்ஸ் சிங்கம், புலிகளுடன் விளையாடினான்.
அரசே! ஜாக்கிரதை!
இவைகள் ரெக்சின் தோழர்கள். பயப்படாதீங்க!

சிங்கம், புலிகூட சாதுவாக இருக்கின்றதே!
ரெக்சை யாராவது தொட்டால் அவ்வளவுதான்!
மேஜர் ரெக்சை தொட முயன்றபொழுது புலி உறுமியது.
கொர்...!
கொர்...!
பார்த்திர்களா? ரெக்சுக்கு பாதுகாப்பு போதுமா?
அப்பாடி....!
உங்கள் மன்னருக்கு பால்டியும் நண்பன்தான்!
பால்டி! உன்னை பார்த்து எவ்வளவு நாளாச்சு!
ரெக்சை தொட்டுப் பாருங்களேன்!
அய்யோ... வேண்டாம்!

பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திதான்! ஆனால்...!
ஆனால் என்ன...?
ரேடியோ தொடர்பு கொள்ள ஒரு வீரனை மட்டும் விட்டுச் செல்கிறேன்!
இவர்தான் ஜான்!
ஆமாம் சார்!
மேஜர் புறப்பட்டார்.
தயவுசெய்து மன்னரை கவனித்துக் கொள்ளுங்கள்!
மேஜர் ரெக்ஸ் எங்களுக்கும் மன்னர்தான்!
ரெக்ஸ் ஈடன் தீவில் குதூகலமாக இருந்தான்.
டைகர் வேகமாகப் போ!
ஓடு... ஓடு!
நகரத்தில் இருப்பதைவிட ரெக்சுக்கு இதுதான் நல்ல பாதுகாப்பு!
ரெக்ஸ் புலியில் சவாரி செய்ய ஜான் பின்னே ஓடிவந்தான்.
வேகமாகப் போ!
ஜான்! ஏன் என்னை பின்தொடர்ந்து ஓடி வருகிறாய்?
அதுதான் என் கடமை அரசே!
உங்களுக்கு ஏதும் என்றால் நான் உடனே அரண்மனைக்கு தகவல் அனுப்ப வேண்டும்!

ஜான்! நாங்கள் அங்கு தூங்குகிறோம்! நீ இங்கே படுத்துக் கொள்!
ரொம்ப நன்றி.
இரவில் ரெக்ஸ் ஹிட் ஹிலாயுசுடன் படுத்து உறங்கினான்.
அலோ... நான் ஜான்...!
ஜான் இரவில் ரேடியோவில் யாருடனோ இரகசியமாக பேசினான்.
இரவில் பேச்சுக் குரல் கேட்டதும் மாயாவி எழுந்தார்.
நான் ஜான் பேசுகிறேன்.
இதற்குமேல் சத்தம் போட்டு பேச முடியாது!
மாயாவி ஜானை நோட்டமிட்டார்.
அரசே! அந்த நேரத்துக்காகத்தான் காத்திருக்கிறேன்!
எப்படியும் கச்சிதமாய் முடித்துவிடுவேன்!
அரசரா...?
மாயாவிக்கு சந்தேகம் வலுத்தது.

மறுநாள்—
ஜான் உன் ரேடியோவை இப்படிக் கொடு!
சரி சார்!
அவர்கள் சென்றதும், மாயாவி அந்த ரேடியோவை இயக்கினார்.
அலோ ஜான் பேசுகிறேன்!
அலோ! ஜான் பேசுகிறேன்!
மன்னரே! ஜானிடம் இருந்து அழைப்பு!
இதோ வருகிறேன்!
என்ன ஜான் காரியத்தை முடித்து விட்டாயா? அலோ.... அலோ...!
இது ஷாம்பாத் மன்னர் டூயூக்கின் குரல் அல்லவா?
அரசே! தொடர்பு துண்டிக்கப் பட்டுவிட்டது!
சே...!
மதியம் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டார்கள்.
ஜான்! நீங்க பிரேயன்களிலா பிறந்தீர்கள்?
அதற்கு பக்கத்தில்.....

எதற்கு பக்கத்தில்?
வந்து... ஷாம்பாத்துக்கு அருகில்!
ஷாம்பாத்தா... அந்த பெயரையே உச்சரிக்காதே!
ஆகட்டும் மன்னா!
நீங்க பரோன்கான் குடிமகன்தானே?
ஆமா சார்!
ஷாம்பாத்தில் எனக்கு உறவினர்கள்கூட இருக்காங்க!
ஏன் என்ன ஆச்சு?
நமககு தெரியாமலே இங்கு ஏதேதோ நடக்கிறது!
மன்னரே! நாம் இந்த தீவை சுத்திப் பாாக்கலாமா?
அருமையான யோசனை!
அந்தப் பக்கம் பெரிய மலை இருக்குதாமே?
ஆமாம் உயரமான மலை!

ஜான்... நீ பள்ளிக்கூடம் போயிருக்கிறாயா?
நான் நிழலுக்குக்கூட பள்ளிக்கூடம் போனதில்லை!
ஷாம்பாத் நாட்டு மன்னரை உனக்குத் தெரியுமா?
நான் சாதாரணமானவன் அவரெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்!
இருவரும் அந்த உயரமான மலைக்கு வந்திருந்தார்கள்.
மலை ரொம்ப உயரம்தான்!
தீவின் அழகே தனிதான்!
மேலே இருந்து கீழே விழுந்தால் ஒரு எலும்பு கூட தேறாது!
ஆமாம் மன்னா!
சரி வா. நாம் கீழே போகலாம்!
அது நடக்காது!
ஜான் திடீரென்று
ஜான்! என்னாச்சு?
இது கட்டளை!
ஜான்! நான் மன்னன்!
அதெல்லாம்

நான் இங்கு வந்தது ஈடன் தீவையும் உன்னையும், மாயாவியையும் பார்ப்பதற்கு அல்ல! உன்னை கொல்லவே வந்தேன்!
ஜான் சுட்டான்.
என்ன சுடமாட்டேங்குதே?
கிளிக்!
சுடாவிட்டால் என்ன? ஒரே அடி.... நீ காலி!
பின்னே வந்த மாயாவி துப்பாக்கியை எடுத்து சுட்டார்.
துப்பாக்கி சத்தம் கேட்டு ஜான் திரும்பினான்.
அதற்குள் ரெக்ஸ் அவனை இழுத்துப் போட்டான்.

மாமா! இவனுக்கு என்ன பைத்தியமா?
இவன் உன்னை கொல்வதற்காகவே இங்கே வந்திருக்கிறான்!
ஷாம்பாத் மன்னருக்கு நெருக்கமானவன்!
நான் சொல்வது உண்மைதானே!
ஆமாம்!
ரெக்சை நீ ஆற்றுக்குள் தூக்கிப் போடுவது போல உன்னை தூக்கிப் போட்டால் நீ காலி!
ரெக்சை கொன்றால் ஷாம்பாத் மன்னர் உனக்கு என்ன தருவதாக கூறினான்?
பெரிய பங்களா...! இராணுவத்தில் பெரிய பதவி... ஏராளமான பணம்!
நம்ப முடிய வில்லையே!

ரெக்ஸ்! இங்கு நடந்தது எதுவும் டயானாவுக்கு தெரிய வேண்டாம்.
நான் சொல்ல மாட்டேன்!
அலோ... பரோன்கான் அரண்மனையா? தளபதி இருக்கிறாரா?
தளபதிதான் பேசுகிறேன்!
ரெக்ஸ் நாட்டுக்கு திரும்ப தளபதி கானுடன் கெலிகாப்டர் அனுப்பு!
மாயாவி, ஜானை டியூக்குடன் பேச வைத்தார்.
அலோ... ஜான் பேசுகிறேன்!
ம்... பேசு!
ஜானா! சொல்லு ஜான்!
ராஜா! காரியத்தை கச்சிதமாக முடித்து விட்டேன்!
ஆகா...
என் திட்டப்படி அந்த பொடியனை தீர்த்துக் கட்டிவிட்டேன்!
நான் உடனடியாக புறப்பட வேண்டும்!
மாமா! நானும்

வேண்டாம் ரெக்ஸ்! நீ இங்கே இருப்பதுதான் நல்லது. எதற்கும் இந்த துப்பாக்கியை வைத்துக் கொள்!
டயானா! எனக்கும் ஜானுக்கும் அவசர வேலை இருக்கிறது! போய்விட்டு வந்துவிடுகிறோம்!
சீக்கிரமாக வந்துடுங்க அப்பா!
மாயாவி ஜானை தூக்கிக்கொண்டு கம்பியில் சறுக்கினார்.
போய் வாங்க!
இதோ கெலிகாப்டர்! தளபதி கான் வந்து விட்டான்!
மன்னரை எங்கே? ஏன் அதற்குள் திரும்புகிறார்!
ரெக்ஸ் வரவில்லை! நாங்கள் மட்டும்தான் வந்தோம்!
எதுவுமே புரியவில்லை!

நீங்கள் அனுப்பிய வீரன் ரெக்சை கொல்ல முயன்றான்!
என்ன இது உண்மையா?
இவன் ஷாம்பாத் மன்னருக்கு கையாளாகத் தெரிகிறது. நீங்கள் எப்படி?
இவன் மன்னர் ரெக்சை கொல்ல முயன்றானா? என்னால் நம்ப முடியவில்லையே?
இவனையே கேட்டுப் பார்!
வாயைத் திறந்து சொல்லு!
உண்மைதான்!
டேய்... உன்னை...!
ஆ... ஆ...!
நம்ம மன்னரையா கொலை செய்யப் பார்த்தாய்? உன்னை.....!
கான்...! நிறுத்து...!
ஆ... அய்யோ...!
கான், ஜானின் கழுத்தை நெரித்தான்.

நிறுத்து! உன்னிடம் நான் சில கேள்விகள் கேட்க வேண்டும்!
இல்லை. இவனை கொன்னாத்தான் என் ஆத்திரம் தீரும்!
கான்! நீங்கதானே மன்னர் ரெக்சுக்கு தலைமை பாதுகாவலர்?
உங்களிடம் நிறைய வீரர்கள் இருக்கும்போது இவனை ஏன் தேர்ந்து எடுத்தீங்க? நீயும் அவனுக்கு கை ஆளா?
இல்லை!
மன்னருடைய பாதுகாப்புக்கு என்னை அனுப்புங்கன்னு இவன்தான் கெஞ்சினான்!
உண்மையா?
ஆமா!
மன்னர் ரெக்சை உயிருக்கு உயிரா நேசிப்பதாக கூறினானே!
அப்படிப்பட்ட நீ ஏன் இப்படி பாதகமான செயலை செய்யத் துணிந்தாய்?
ஓ... ஓ...!
ஜான் எனது மகன்?
ஜான் கேவிக் கேவி அழுதான்.

ஷாம்பாத் நாட்டு பெண்ணை நான் திருமணம் செய்திருக்கிறேன். இவன் எங்களுக்கு பிறந்தவன்தான். இவன் திட்டம் எதுவும் எங்களுக்குத் தெரியாது!
இருவரும் கெலிகாப்டரில் ஏறுங்கள்!
உங்கள் கதையை இராணுவ கோர்ட்டில் வந்து சொல்லுங்கள்!
மன்னரை கொலை செய்ய முயன்ற குற்றத்துக்கு உங்கள் நாட்டில் மரண தண்டனைதானே விதிப்பார்கள்!
கொலை முயற்சி இரகசியமாக இருக்கட்டும்!
தரை இறங்கும்போது நாம் எதுவும் காட்டிக்கொள்ளக் கூடாது!
சரி... சரி!
கெலிகாப்டர் பரோன்கான் நாட்டில் தரை இறங்கியது.
மேஜர்! நமது மன்னரை எங்கே?
வந்து... விடுமுறை இன்னும் முடியவில்லை!
தளபதி! உங்களிடம் விபரமாக சொல்வார்!

நீதிமன்றத்தில் ஜான் நிறுத்தப்பட்டான்.
ரெக்சை கொல்ல முயன்றது நான்! என் அப்பா அப்பாவி!
இந்த கொடுமையை செய்யத் தூண்டியது யார்?
மன்னர் ரெக்சை கொன்றால், பணமும் பதவியும் தருவதாக ஷாம்பாத் மன்னர் டியூக் சொன்னார்.
இவனை தூக்கில் போட வேண்டும்!
ஷாம்பாத் மன்னரை என்ன செய்யலாம்?
ஷாம்பாத் மீது படையெடுத்துச் சென்று அவனை சிறைபிடிப்போம்!
இதற்கு நம் மன்னரின் ஒப்புதலை பெறவேண்டும்!
ஷாம்பாத் நாட்டில்—
பொடியன் இறந்துவிட்ட செய்தி பரோன்கானில் இருந்து வந்ததா?
நம்ம ஆளு கெலிகாப்டரில் திரும்பி வந்துவிட்டதாக செய்தி வந்தது?
அவனை யாரும் சந்தேகப் படவில்லை!
அற்புதமான திட்டம் தீட்டிக் கொடுத்தது நானல்லவா?

நம் மன்னருடைய பாதுகாவலரிடம் கேட்போம்!
ரெக்ஸ் நிச்சயம் போரை விரும்ப மாட்டான்!
போரில் பல அப்பாவிகள் இறக்க நேரிடும்!
அப்படியானால் அந்த அயோக்கியனை எப்படி தண்டிப்பது?
போர் இல்லாமல் அவனை தண்டிக்க ஒரு வழி இருக்கிறது!
ஜானை சிறையில் அடைத்தார்கள்.
ஜான்! உனக்கு மரண தண்டனை விதிச்சிருக்காங்க!
நானும் அதைத்தான் எதிர்பார்த்தேன்!
மரண தண்டனையில் இருந்து ஆயுள் தண்டனை பெற ஒரு வழி இருக்கு!
தூக்கில் தொங்கி துடிதுடித்து சாவதைவிட இது மேல் அல்லவா?
நான் என்ன செய்ய வேண்டும்?

ஷாம்பாத் மன்னன்தான் ரெக்சை கொலை செய்ய சதி செய்தான் என்று நீ சாட்சி சொன்னால் தூக்கு கயிற்றில் இருந்து தப்பிக்கலாம்!
அதை அப்போதே சொல்லிவிட்டேனே?
ஷாம்பாத் மன்னருக்கு எதிரில் நீ சொல்ல வேண்டும்!
அது எப்படி முடியும்? அவரை கைது செய்ய முடியாதே!
அதைப்பற்றி உனக்கென்ன கவலை?
நான் சாக விரும்பலை! நீங்கள் சொல்வதை கேட்கிறேன்!
ரெக்சும் இதையேதான் விரும்பு கிறான்!
ஷாம்பாத் மன்னரை ரேடியோவில் அழை!
அலோ... நான் ஜான் பேசுகிறேன்!
ஜானா... ம்... சொல்லு!
எல்லாம் சிறப்பாக முடிந்தது. அடுத்த வாரம் வருகிறேன்!
ஓ.கே. உன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன்!

போரும் நடக்கக்கூடாது. பிறகு எப்படி ஷாம்பாத் மன்னரை அழைத்து நீதிமன்றத்தில் நிறுத்த முடியும்?
அதை நான் பார்த்துக்கொள்ளு கிறேன்!
அதோ அந்த ஆற்றுக்கு அந்தப்புரம் ஷாம்பாத் நாடு இருக்கிறது. காவல் அதிகம்! ராணுவமும் ரொம்பப் பெரியது! உங்களுக்கு ஏதும் உதவி தேவையா?
நல்ல நேரம் இருந்தால் போதும்!
மாயாவி விருட்டென்று தண்ணீருக் குள் குதித்தார்.
விசுக்...!
ஆற்றுக்கு அந்தப்புரம் ஷாம்பாத் காவலர் கள் இருந்தார்கள்.
தொபுக்...!
ஏதோ சத்தம் கேட்கிறதே!
ஏதாவது மீன் துள்ளும்!

மாயாவி கரையேறி அவர்கள் தலையை ஒன்றோடு ஒன்று மோதினார்.
டமார்...!
ரெண்டும் தவறு!
இவனிடம் மூச்சு இருக்கிறது! எழுந்திருடா!
அம்மா...!
ஆ... அய்யோ!
என்னை உங்கள் அரண்மனைக்கு கூட்டிப் போ!
சரி... சரி!
எங்கள் மன்னரை கொல்ல வந்திருக்கிறாயா?
கொல்ல வேண்டும் என்கிறாயா?
ராணுவத்தில் இருக்கும் நீயே விசுவாசமாக இல்லையே?
இல்லை. சும்மா கேட்டேன்!

அவன் ஒரு மன்னனா? சுத்த ரவுடி! காவலாளிகள் தவிர யாருமே அவனை மதிப்பதில்லை!
?
ஷாம்பாத் நாட்டுக்கு டியூக்தானே உண்மையான மன்னர்!
இல்லை! அவருடைய மருமகள் அலிசாதான் உண்மையான ராணி!
ஆனால் ராணிக்கு 12 வயதுதான் ஆகிறது!
அதற்குமேல் அலிசாவை உயிரோடு வைத்திருக்க மாட்டான்!
அலிசா எங்கே?
டியூக் அவளை கொன்று விடுவான்! அவள் எங்கே இருக்காள்ன்னு யாருக்கும் தெரியாது!
இங்கே நிறுத்து!
மாயாவி சட்டென்று மரத்தில் ஏறினார்.
மரத்தில் இருந்து அங்கே நின்ற ஒருவன் மீது குதித்தார்.

மாயாவி அவன் உடைகளை கழற்றினார்!
அடேயப்பா என்ன வேகம்!
ஜானை அழைத்து வந்து இருப்பதாக தகவல் அனுப்பு!
வாசலில்—
ஏய் ஜானை அழைத்து வந்திருக்கிறேன்!
மன்னரே! ஜான் வருகிறானாம்!
ஆகா! நான் எதிர்பார்த்து காத்து இருக்கேன்!
முன்வாசல் வழியாக ஜான் வருகிறான்!
அவனை வாசலிலேயே நிறுத்தி வை!
வரட்டும்! அவனுக்கு பரிசு தயாராக இருக்கிறது!
டியூக் துப்பாக்கியோடு நின்றுகொண்டிருந்தான்.
ஜானின் வேடத்தில் மாயாவி அரண்மனைக்குள் நுழைந்தார்.
இங்கே நில்!

ஜானை
அங்கேயே
நிறுத்தி வை!
நான் குறிபார்க்க
அதுதான் வசதியாக
இருக்கும்!
ஜான் வேடத்தில் இருந்த
மாயாவி சுதாரித்துக்
கொண்டார்.
ஜானை டியூக்
எப்படியும்
தீர்த்துக் கட்டி
விடுவான்!
இங்கேயே சுடுவானா
அல்லது உள்ளே
அழைத்துக்
கொல்வானா என்று
தெரியவில்லை!
அட இங்கேயே
துபபாக்கியோடு
தயாராக
இருக்கிறானே?
அடுத்த விநாடி— மேலே
இருந்த டியூக் சுட்டான்.
டுமீல்!
ஆள் காலி!
அவன் பிணத்தை
மேலே கொண்டுவரச்
சொல்!
ஜான் பிணத்தை மேலே
கொண்டுவரச் சொல்லி
டியூக் உத்தரவு!
துப்பாக்கி குண்டு
அவர் மேல
பட்டதா?

அகழிக்குள் விழுந்தானா? இல்லை குதித்தானா?
இதோ அவன் தொப்பி மிதக்கிறதே?
மாயாவி தண்ணீருக்குள் நீந்திச் சென்றார்.
ஜான் அகழிக்குள் விழுந்து விட்டானாம்!
அவன் பிணத்தை தேடிகொண்டு வரச்சொல்!
அவன் பிணத்தை மன்னர் பார்க்க வேண்டுமாம்!
அதைத்தான் தேடுகிறோம்!
தொப்பி கிடக்கு ஆளை எங்கே?
பிணம் அடியில் கிடக்கும்!
என்ன கிடைத்ததா?
இல்லை!
மன்னருக்கு பதில் சொல்லியாக வேண்டும். தேடுங்கள்!
அதே நேரம்— மாயாவி அகழி வழியாக தப்பி பாதாள சிறைக்கு வந்தார்.
கிரிச்...

உள்ளே—
உஷ்... சத்தம் போடாதீர்கள்!
ஆ...
இளவரசி அலிசா நீதானே?
பாவம்! சின்னக்குழந்தை அவளை விட்டுவிடு!
உங்களுக்கு உதவவே வந்திருக்கிறேன்!
சாப்பிட ஏதாவது தருவாயா?
சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு!
ஆமாம்! ரொம்ப பசிக்குது!
அதோ காவலாளி வருவது போல தெரிகிறது! அவன் வந்தால் உடம்பு சரியில்லை என்று சொல்!
காவலாளி வந்து கதவை தடடினான்.
எனக்கு உடம்பு
சுகமில்லையா?
உள்ளேயே அடைஞ்சு கிடக்க கஷ்டமா இருக்கு!
அவன் கதவை திறந்ததும்
என்ன பிணம்ப் கிடைத்ததா?
இல்லை மன்னா!

அவன்தான் மடிந்தானே! அலிசாவை என்ன செய்யப் போறீங்க?
சாப்பாடு இல்லாமல் சாகப் போறாங்க!
அவளுடைய இறுதி ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்யணும்!
சிறிதுநேரம் இருங்கள். இதோ வருகிறேன்!
கண்டிப்பா சாப்பாடு கொண்டு வாங்க!
ஜான் உடம்பு கிடைக்காததால் குழப்பமாக இருக்கு?
ஏய்... இன்னும் 15 நிமிடத்தில் அவன் பிணம் கிடைக்கலை உங்க தலை உருளும்!
அதற்கு அவசியம் இருக்காது டியூக்!
திடீரென்று மாயாவி அங்கே தோன்றினார்.

ஜான் பரோன்கான் சிறையில் பத்திரமாக இருக்கிறான். அவன் போல வந்தது நான்தான்! பரோன்கானில் உனக்கும் சிறை தயாராக இருக்கிறது!
நீதான் மாயாவியா? சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்க வந்திருக்கிறாயா? உன்னை...
ரெக்சை கொல்ல நீ சதி செய்ததை ஜான் வாக்குமூலத் தில் சொல்லி விட்டான்!
அவன் ஏதோ உளறியிருக் கிறான்!
ரெக்ஸ் இப்போது உயிரோடு இருக்கிறான்!
பொய்!
பொய் என்ற வார்த் தையே எனக்கு பிடிக்காது!
உன் வயர்லெஸ் ரேடியோவை எடு!
லொக்! லொக்!
அலோ... ஈடன் தீவா? ரெக்சை பேசச் சொல்!
நான்தான் ரெக்ஸ் பேசுகிறேன் மாமா!

என்ன ஆச்சு? டியூக் என்ன ஆனான்!
இதோ டியூக் என் முன்னாடிதான் நிற்கிறான்!
என் படை முழுக்க இங்கே இருக்கு. நீ தப்ப முடியாது!
அப்படியா! ரொம்ப நல்லது!
மாயாவி டியூக்கை பாதாள சிறைக்கு அழைத்துப் போனார்.
ஆ...!
இளவரசி அலிசா! இதோ உனக்கு சாப்பாடு!
ஆகா! ரொம்ப நன்றி!
இந்த பெண்ணை பட்டினி போட்டு சாகடித்துவிட்டு நீ ஆட்சியை பிடிக்க திட்டம் போடுகிறாய்!
அது மிகப்பெரிய கொடுமை!

அவர் சொல்வது உண்மை! நீ துரோகி!
அலிசா சீறினாள்.
டியூக் துப்பாக்கியை எடுத்தான்.
இப்போதே உங்களை எமலோகத்துக்கு அனுப்புகிறேன்!
மாயாவி அவன் துப்பாக்கியை தட்டிவிட்டார்.
ஆ...!
துப்பாக்கியை கீழே போடுடா!
இனியாவது புத்தி வருதா என்று பார்ப்போம்!
இன்னும் ஒன்று கொடுங்க!
மாயாவி அவன் தலையைப் பிடித்து சுவரில் மோதினார்.
இளவரசி! நீங்க சொன்னபடி தளபதிகள் வந்திருக்காங்க!
இளவரசிக்கு வணக்கம்!
தளபதிகளே! இனி நான் எங்கும் போகமாட்டேன்!

டியூக்கை தளபதிகள் முன் நிறுத்தினார்கள்.
இவன் எங்களை பட்டினி போட்டு கொல்லப் பார்த்தான்!
ஆமாம்!
சுத்த பொய்!

விடாதே! அடித்துக் கொல்லு!
போதும் நிறுத்துங்கள்!

ரெக்சை கொல்ல முயன்றதால் டியூக்கை நான் அழைத்துச் செல்கிறேன்!
இங்கு இருந்து அவன் தொலைந்தால் போதும்!
!!

இளவரசி அலிசாவைக் காக்கவேண்டியது உங்கள் பொறுப்பு!
அதற்காக உயிரைக் கொடுப்போம்! ஆமா உங்கள் பெயர் என்ன?
மாயாவி ஈடனுக் குத் திரும்பினார்.
இதோ உங்கள் அப்பா வருகிறார்!
மாயாவி ஹெலிகாப்டரில் இருந்து இறங்கி, கம்பியில் சறுக்கி வந்தார்.
அய் அப்பா! மாமா வந்தாச்சு!
ஷாம்பாத் மன்னர் ரெக்சை கொல்ல ஜானை ஏற்பாடு செய்திருக்கிறான்! அவன் திட்டத்தை முறியடிச்சாச்சு!
அப்படியா?
உடனே மாயாவி ஈடன்தீவில் இருந்து புறப்பட்டார்.
குட்பை! வரட்டுமா?

பரோன்கான் நீதிமன்றத்தில் டியூக் நிறுத்தப்பட்டான்.
பொய்!
அமைதி!
மன்னர் ரெக்சை கொலை செய்ய ஷாம்பாத் மன்னர் டியூக்கான் தூண்டிவிட்டார்!
ஜானின் துப்பாக்கியில் இருந்த குண்டுகளை மாயாவி மர்மா எடுத்து விட்டதால் நான் தப்பினேன்!
மன்னரை கொல்ல முயன்ற டியூக்குக்கு மரண தண்டனை விதிக்கப் படுகிறது!
அதை நான் மாற்றுகிறேன்!
?
மன்னா! தண்டனையை ஏன் மாற்றுகிறீர்கள்?
அவன் உங்களை கொல்ல முயன்றிருக்கிறான்!
பொறுங்கள்!
மாமா! அவர்கள் வந்தாச்சா!
ஹெலிகாப்டரில் வருகிறார்கள்!
இப்படி இறங்கி வாங்க!
காட்டில் இருந்த காட்டு வாசிகளை அழைத்து

என் அதிகாரத்தை பயன் படுத்தி உன் தண்டனை யை மாற்றுகிறேன்!
குற்றம் நடந்த இடம் காடு. எனவே டியூக் தண்டிக்கப் படவேண்டிய இடமும் காடுதான்!
காட்டுவாசிகள் முன் டியூக் நிறுத்தப்பட்டார்.
இவர்கள் மனித மாமிசம் தின்கிறவர்கள். இவர்களிடம் நீ ஆயுசுக்கும் அடிமையாக வேலை பார்க்க வேண்டும்!

உன்னை சாப்பிட மாட்டேன் என்று உறுதி அளித்திருக்கிறார்கள்! நீ தகராறு செய்தால் காலி!
மாயாவி! நாங்கள் மனித மாமிசம் சாப்பிடுவதில்லையே?
தெரியும்! இவனிடம் காட்டிக் கொள்ளாதீர்கள்!
வந்த வேலை முடிந்தது. நாங்கள் புறப்படுகிறோம்!
கண்டிப்பாக போகவேண்டுமா?
உன்னை பிரிய மனம் இல்லை ரெக்ஸ்!
மன்னரே...! உங்களை சந்திக்க முக்கிய விருந்தாளி வருகிறார்!
ஷாம்பாத் இளவரசி ரெக்சை பார்க்க பரோன்கானுக்கு வந்தாள்.

மன்னரே! தங்களுக்கு மரியாதை தெரிவிக்கவும், இரு நாடுகள் இடையே நட்பு ஏற்படுத்தவும் இளவரசி வந்து இருக்கிறார்!
அலிசா வருக! உங்களுக்கு 12 வயதுதான் ஆகிறதா?
உங்களுக்கும் 12 வயதுதான் என்று கேள்விப்பட்டேன்!
ரெக்ஸ்! உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டு இருக்கிறேன்! ஆனால் பார்த்தது இல்லை!
அய்யா... ரெக்சுக்கு ஜோடி கிடைச்சாச்சு!
இனி அடிக்கடி சந்திக்கலாம்!

பொடிசுகள் ரெக்சை கேலி செய்தார்கள்!
ரெக்சுக்கு ஜோடி கிடைச்சாச்சு!
டேய் பசங்களா! ஓடாதீங்கடா!
என் உயிரை காப்பாற்றியதற்கு நன்றி! நானும் உங்களை மாமா என்று கூப்பிடலாமா?
தாராளமாக!
ரெக்ஸ் என்னை சந்திக்க என் நாட்டுக்கு வருவாயா?
அடுத்த வாரம் வருகிறேன்!
ரெக்ஸ் பாடு ஜாலிதான்! இனி நம்மை தேடமாட்டான்!
அருமையான ஜோடி!
(முடிந்தது)

அடுத்த
காமிக்ஸ்

பாலைவனக் கொள்ளை

விறுவிறுப்பு, திகில்,
மர்மம் நிறைந்த படக்கதை!

அக்டோபர் 1 "ராணி காமிக்ஸ்"
இதழில் வெளிவருகிறது!

படித்து மகிழுங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Regd.with the registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971-8567

SEPTEMBER 16, 1998

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக
32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்